# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## ECS 3.11 – INTERNATIONAL ENVIRONMENT OF BUSINESS

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "சர்வதேசரீதியில் இன்று அனைத்து நாடுகளிலுமே பொருளாதார பின்னடைவு நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது." இதற்கான காரணங்களை விளக்கி கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

02. அ) 'காரணி விலைச் சமப்படுத்தல் தேற்றம்' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

ஆ) புதிய வர்த்தகக் கோட்பாடுகள் எவ்வாறு இதிலிருந்து வேறுபடுகின்றன என்பதனை விளக்குக.

(15 புள்ளிகள்)

03. அ) வர்த்தக மாற்றுவீதம் (Term of trade) என்ற பதத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு தனியாகவும், வளர்முக நாடுகளுக்கு தனியாகவும் வர்த்தக மாற்றுவீத கணிப்பீட்டு முறை வேறுபடுவது அவசியம் எனும் வாதத்தை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. "உலகமயமாக்கம் அது நம்பப்பட்டது போல் அதிகளவு நன்மைகளை வளர்முக நாடுகள் மீது எடுத்து வரவில்லை." மேற்படி கூற்றை விமர்சிக்குக.

(20 புள்ளிகள்)

05. அ) இறுப்புக்கள் மீதும் இறுப்பு அல்லாத தடைகள் மீதும் உள்ள ஆதரவான, எதிரான கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) செயற்திறன் வாய்ந்த இறுப்பு ஒன்று, வளர்முக நாடு ஒன்றின் மீது எடுத்து வரக் கூடிய பல்வேறுபட்ட விளைவுகளையும் வரைபட ரீதியாக விளக்குக.

(12 புள்ளிகள்)

06. அ) நாணயமாற்றுவீத நிர்ணயிப்பு குறித்த இரு வேறுபட்ட அணுகு முறைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான வரைபடத்தின் துணையுடன் சமநிலை நாணயமாற்று வீதத்தின் நிர்ணயிப்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

இ) இன்றைய நிலையில், ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கையின் உள்நாட்டுப் பெறுமதி ஏன் நிலையாக இருந்து வரவில்லை? காரணங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(தொடர்........2ல்)

07. இலங்கையின் படுகடன் நெருக்கடி, இன்று அனைத்துக் கடப்பாடுகளையும் கடந்துவிட்டது." ஏற்றுக் கொள்வீரா? சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு (02) விளக்கக் குறிப்புக்கள் தருக.

அ) பல்தேசியக் கம்பனிகளும் அன்னிய நேரடி முதலீடுகளும்.

ஆ) தடையற்ற வர்த்தகமும் வளர்முக நாடுகளும்.

இ) கொள்வனவுச் சக்தி சமமதிப்புக் கோட்பாடும், நாணய மாற்று வீத நிர்ணயமும்.

(தலா 10 புள்ளிகள்)

*****